இன்றைய செய்தி நாளைய வரலாறு




# முரசொலி

Murasoli

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

www.murasoli.in    murasolidaily@gmail.com

தொடக்கம்: 10.8.1942 – முரசு: 83 – ஒலி: 122 – திருவள்ளுவர் ஆண்டு 2055 – கார்த்திகை 26 – புதன்கிழமை 11 டிசம்பர் 2024 – கோவை ★★ 8 பக்கங்கள் Established: 10.8.1942 - Volume: 83 - Issue 122: Thiruvalluvar Year - 2055 - Karthigai 26 - Wednesday 11 December 2024 - Kovai ★★ 8 Pages ₹ 5.00

## மாநில அரசுகளின் அனுமதியின்றி எந்தச் சுரங்க உரிமத்தையும் வழங்கக்கூடாது!

# டங்ஸ்டன் சுரங்க உரிமையை உடனே ரத்து செய்க!

## பேரவையில் ஒன்றிய அரசை வலியுறுத்தி தனித் தீர்மானம்! ஒருமனதாக நிறைவேறியது!



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (9.12.2024) சட்டமன்றப் பேரவையில், மதுரை மாவட்டம், மேலூர் வட்டம், நாயக்கர்பட்டி கிராமத்தில் இந்துஸ்தான் ஜிங்க் லிமிடெட் நிறுவனத்திற்கு வழங்கப்பட்ட டங்ஸ்டன் கனிமச் சுரங்கம் அமைப்பதற்கான உரிமத்தை உடனடியாக ரத்து செய்திடவும், மாநில அரசுகளின் அனுமதியின்றி எந்தச் சுரங்க உரிமத்தையும் வழங்கக் கூடாது என்றும், ஒன்றிய அரசை வலியுறுத்தி முன்மொழியப்பட்ட அரசினர் தனித் தீர்மானத்தை வலியுறுத்தி உரையாற்றினார்.

**சென்னை, டிச. 11 -**

**“மதுரை மாவட்டத்தில் டங்ஸ்டன் சுரங்க உரிமையை உடனே ரத்து செய்ய வேண்டும்” என்று சட்டப்பேரவையில் ஒன்றிய அரசை வலியுறுத்தி அவை முன்னவரும் நீர்வளத் துறை அமைச்சருமான துரைமுருகன் அவர்கள் அரசின் சார்பில் தனித் தீர்மானம் கொண்டு வந்து முன்மொழிந்தார். பின்னர் இத்தீர்மானம் பேரவையில் ஒருமனதாக நிறைவேறியது.**

சட்டப்பேரவையில் நேற்று முன்தினம் நீர்வளத் துறை அமைச்சர் துரைமுருகன் அவர்கள் முன்மொழிந்த தீர்மானம் வருமாறு :-

“மதுரை மாவட்டம், மேலூர் வட்டம், நாயக்கர்பட்டி கிராமத்தில் டங்ஸ்டன் கனிமச் சுரங்கம் அமைப்பதற்கான உரிமத்தை இந்துஸ்தான் ஜிங்க் லிமிடெட் நிறுவனத்திற்கு ஒன்றிய அரசு வழங்கியுள்ளது. இத்தகைய இன்றியமையாத மற்றும் முக்கியக் கனிமங்களுக்கான உரிமங்களை மாநில அரசுகளின் அனு மதியின்றி, ஒன்றிய அரசு ஏலம் விடக் கூடாது என்று கடந்த 3.10.2023 அன்று, தமிழ்நாடு அரசு வலியுறுத்தியிருந்தும், இந்த எதிர்ப்பைக் கருத்தில் கொள்ளாது, ஒன்றிய அரசு இத்தகைய ஏல நடவடிக்கையை மேற்கொண்டது கண்டிக்கத்தக்கது.

### தமிழ்நாட்டு மக்கள் ஒருபோதும் ஏற்க மாட்டார்கள்!

இந்த டங்ஸ்டன் உரிமம் வழங்கப்பட்ட பகுதியானது, குடைவரைக் கோயில்கள், சமணச் சின்னங்கள், தமிழ்ப் பிராமி வட்டெழுத்துக்கள், பஞ்சபாண்டவர் படுகைகள் போன்ற பல வரலாற்றுச் சின்னங்களை உள்ளடக்கியதாகவும், அரியவகை உயிரினங்களின் வாழ்வாதாரமாகவும் இருப்பதைக் கருத்தில் கொண்டு, இப்பகுதி ஒரு பல்லுயிர்ப் பெருக்கத் தலமாக, கடந்த 2022-ஆம் ஆண்டு தமிழ்நாடு அரசால் அறிவிக்கப்பட்டிருப்பதைச் சுட்டிக்காட்டிய நிலையிலும், அப்பகுதியில் சுரங்க நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கான உரிமம் ஒன்றிய அரசால் அளிக்கப்பட்டுள்ளதை, தமிழ்நாடு அரசும், தமிழ்நாட்டு மக்களும், ஒருபோதும் ஏற்றுக் கொள்ளமாட்டார்கள்.

### எதிர்த்து 1360 போராட்டங்கள்!

இப்பகுதியில் வாழும் மக்களின் வாழ்வாதாரம் நிரந்தரமாகப் பாதிக்கப்படும் என்ற அச்ச உணர்வை ஒன்றிய அரசின் இந்த நடவடிக்கை ஏற்படுத்தியுள்ளதால், அப்பகுதி மக்கள் இதனை எதிர்த்து 1360 போராட்டங்களை முன்னெடுத்து வருகின்றனர். இவை அனைத்தையும் கருத்தில் கொண்டு, இப்பகுதியையும், இப்பகுதியில் வாழும் மக்களையும் பாதுகாக்கும் பொருட்டு, இந்துஸ்தான் ஜிங்க் லிமிடெட் நிறுவனத்திற்கு டங்ஸ்டன் கனிமச் சுரங்க ஒப்பந்தம் வழங்கிய ஒன்றிய அரசின் நடவடிக்கையைக் கைவிடுமாறு முதலமைச்சர் அவர்கள் இந்தியப் பிரதமர் அவர்களை ஏற்கெனவே வலியுறுத்தியுள்ளார்கள்.

இந்தச் சூழ்நிலையில், மதுரை மாவட்டம், மேலூர் வட்டம், நாயக்கர்பட்டி கிராமத்தில் இந்துஸ்தான் ஜிங்க் லிமிடெட் நிறுவனத்திற்கு வழங்கப்பட்ட டங்ஸ்டன் சுரங்க உரிமத்தை உடனடியாக இரத்து செய்திடவும், மாநில அரசுகளின் அனுமதியின்றி எந்தச் சுரங்க உரிமத்தையும் வழங்கக் கூடாது என்றும், ஒன்றிய அரசை வலியுறுத்தி இந்தப் பேரவை ஒருமனதாக தீர்மானிக்கிறது.”

இவ்வாறு தீர்மானத்தை முன்மொழிந்து நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகன் அவர்கள் பேசினார்.

### அனைத்துக் கட்சியினரும் வரவேற்பு!

இத்தீர்மானத்தின் மீது சட்டமன்றத்தில் அனைத்துக் கட்சியினரும் வரவேற்று பேசினர். அ.தி.மு.க. - எதிர்க்கட்சித் தலைவர் எடப்பாடி பழனிசாமியும் அரசு கொண்டுவந்த தனித் தீர்மானத்தை வரவேற்பதாக கூறிட பேரவையில் தீர்மானம் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.-

இத்தீர்மானத்தின் மீது சட்டமன்ற கட்சித் தலைவர்கள், உறுப்பினர்கள் தமிழ்நாடு வாழ்வுரிமைக் கட்சித் தலைவர் வேல்முருகன், கொங்கு நாடு ஈஸ்வரன், மனித நேய மக்கள் கட்சி அப்துல்சமது, ம.தி.மு.க. சதன் திருமலைக்குமார், இந்திய கம்யூனிஸ்ட் கட்சி மாரிமுத்து, மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி சின்னதுரை, விடுதலைச் சிறுத்தைகள் கட்சி சிந்தனைச் செல்வன், பா.ஜ.க. நைனார் நாகேந்திரன், பா.ம.க. ஜி.கே.மணி, காங்கிரஸ் அசோகன், எதிர்க்கட்சித் தலைவர் எடப்பாடி பழனிச்சாமி ஆகியோர் பேசினர்.

இதையடுத்து இத்தீர்மானம் ஒருமனதாக நிறைவேறியதாக பேரவைத் தலைவர் மு.அப்பாவு அவர்கள் அறிவித்தார்.

---

அறிவாற்றல், கடும் உழைப்பு, அஞ்சாமை ஆகிய பண்புகளை ஒருங்கே பெற்ற

# தலைசிறந்த திராவிட இயக்க சிந்தனையாளர் முரசொலி செல்வம்!

## சட்டப்பேரவை இரங்கல் தீர்மானத்தில் புகழாரம்!

**சென்னை, டிச. 11 -**

**“அறிவாற்றல், கடும் உழைப்பு, அஞ்சாமை ஆகிய பண்புகளை ஒருங்கே பெற்ற தலைசிறந்த திராவிட இயக்கச் சிந்தனையாளர் முரசொலி செல்வம் அவர்கள்” என்று சட்டப்பேரவையில் பேரவைத் தலைவர் மு.அப்பாவு அவர்கள் இரங்கல் தீர்மானம் கொண்டு வந்து புகழாரம் சூட்டினார்.**

சட்டப்பேரவையில் பேரவைத் தலைவர் மு.அப்பாவு அவர்கள் கொண்டு வந்த இரங்கல் தீர்மானத்தில் கூறியதாவது:



சிறந்த எழுத்தாளரும், மூத்த பத்திரிகையாளரும், முரசொலி நாளிதழின் நிர்வாக ஆசிரியருமான முரசொலி செல்வம் அவர்கள் 10.10.2024 அன்று மறைவுற்ற செய்தியறிந்து இப்பேரவை அதிர்ச்சியும் ஆற்றொணாத் துயரமும் கொள்கிறது.

### அனைவரிடமும் நட்பு பாராட்டியவர்!

ஊடகத் துறை, திரைத் துறை எனப் பல்வேறு தளங்களில் தனக்கெனத் தனி முத்திரை பதித்த முரசொலி செல்வம் அவர்கள், 84 வயதிலும் கொள்கை உறுதிமிக்க பத்திரிகையாளராக செயல்பட்டவர். முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் எழுத்து நடையில் தன் பாணியிலான கருத்து செறிவுமிக்க கட்டுரைகளை வழங்கியவர். தலைசிறந்த திராவிட இயக்கச் சிந்தனையாளர். அனைவரிடமும் நட்பு பாராட்டியவர். அறிவாற்றல், கடும் உழைப்பு, அஞ்சாமை ஆகிய பண்பு நலன்கள் ஒருங்கே அமையப் பெற்றவர்.

அன்னாரது மறைவால் அவரை இழந்துவாடும் அவரது குடும்பத்தினருக்கும் ஊடகத் துறை சார்ந்தவர்கள் உள்ளிட்ட அனைவருக்கும் இப்பேரவை தனது ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தினையும் தெரிவித்துக்கொள்கிறது.

இவ்வாறு பேரவைத் தலைவர் மு.அப்பாவு அவர்கள் இரங்கல் குறிப்பை வாசித்தார்.

---

## நான் முதலமைச்சராக இருக்கும் வரை தமிழ்நாட்டில்

# டங்ஸ்டன் திட்டத்தை அனுமதிக்கவே மாட்டேன்!

## சட்டப்பேரவையில் முதல்வர் மு.க.ஸ்டாலின் பிரகடனம்!

**சென்னை, டிச. 11 -**

**“நான் முதலமைச்சராக இருக்கும் வரை டங்ஸ்டன் திட்டத்தை தமிழ்நாட்டிற்குள் நுழைய விடமாட்டேன்” என்று முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சட்டப்பேரவையில் பிரகடனம் செய்தார்.**

சட்டப்பேரவையில் நேற்று முன்தினம் மதுரை மாவட்டம் அரிட்டப்பாட்டியில் டங்ஸ்டன் சுரங்கத்துக்கு வழங்கப்பட்ட உரிமத்தை ரத்து செய்ய வலியுறுத்தி தனித் தீர்மானம் கொண்டு வரப்பட்டது. இந்த தனித் தீர்மானம் மீது பல்வேறு கட்சி உறுப்பினர்களும் உரையாற்றினர்.

அந்த வகையில் தனித் தீர்மானம் மீது எதிர்க்கட்சித் தலைவர் எடப்பாடி பழனிசாமி உரையாற்றினார். அப்போது, “தமிழக அரசு 10 மாதங்களாக என்ன செய்து கொண்டிருந்தது” என்று எடப்பாடி பழனிசாமி தொடர்ந்து அதே கேள்வியை எழுப்பிய வண்ணமிருந்தார்.

அப்போது நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகன்,. தொடக்கம் முதலே டங்ஸ்டன் சுரங்கத்துக்கு எதிர்த்து வருகிறோம். சுரங்கத்துக்கு ஒப்பந்தம் விடுவதற்கான சட்டத்தில் ஒன்றிய அரசு தானே ஒரு திருத்தத்தை செய்துவிட்டது. யாரையும் கேட்கவில்லை. சட்டத்தைத் திருத்திவிட்டு ஒன்றிய அரசு என்ன சொல்கிறது என்றால், சுரங்கத்துக்கான ஏலம் விடும் அதிகாரம் ஒன்றிய அரசுக்கே உள்ளது.

மேலும், ஒன்றிய அரசு தேர்வு செய்யும் ஏலதாரருக்கு சுரங்கத்தை குத்தகை விடும் அ திகாரம் மட்டுமே மாநிலத்துக்கு உள்ளது என்று கூறியிருக்கிறது. டங்ஸ்டன் சுரங்கத்தால் ஏற்படும் பாதிப்புகளை புள்ளி விவரங்களுடன் ஒன்றிய அரசுக்கு தெரிவித்துவிட்டோம். தமிழ்நாடு அரசு எதிர்ப்பு தெரிவிக்கவில்லை என்பது முற்றிலும் தவறானது என்று கூறினார்.

அப்போதும் எடப்பாடி பழனிசாமி தான் கூறியதையே மீண்டும் கூறினார்.

இந்நிலையில் சட்டப்பேரவையில் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் எதிர்க்கட்சித் தலைவருக்கு அளித்த பதிலடி வருமாறு:-

இங்கு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் நாடாளுமன்றத்தில் உங்கள் உறுப்பினர்கள் இத்தனை பேர் இருக்கிறார்கள் என்று பெருமை பேசுகிறீர்களே, என்ன செய்தீர்கள் என்ற ஒரு கேள்வியைக் கேட்டார்கள். எங்களுடைய நாடாளுமன்ற உறுப்பினர்கள் நாடாளுமன்றத்திலே கடுமையாக எதிர்த்திருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

தொடர்ச்சி 4-ஆம் பக்கம்

---

சுரங்கம் - கனிமத் திருத்தச் சட்ட வரைவை

## நாடாளுமன்றத்தில் ஆதரித்த அ.தி.மு.க.!

### எடப்பாடி பழனிச்சாமியின் அவதூறுக்கு முதல்வர் மு.க.ஸ்டாலின் கண்டனம்!

சென்னை, டிச. 11-

நாடாளுமன்றத்தில் சுரங்கம் மற்றும் கனிமத் திருத்த சட்ட வரைவை ஆதரித்தது அ.தி.மு.க. என்று முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள், தமது சமூக வலைதளப் பதிவில் குறிப்பிட்டுள்ளார்.

முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களின் சமூக வலைதளப் பதிவு வருமாறு:-

**சுரங்கம் மற்றும் கனிமத் திருத்தச் சட்ட வரைவிற்கு நாடாளுமன்றத்தில் ஆதரித்து வாக்களித்துவிட்டு, இப்போது சட்டப்பேரவையில் தமிழ்நாட்டின் நலனுக்காகப் பேசுவதுபோல் நடிக்கும் பழனிசாமி அவர்கள், அவதூறுகளைப் பரப்பி உயிர் வாழும் அ.தி.மு.க.வின் துரோக வரலாற்றுக்கு அடையாளமாய் இருக்கிறார்.**

**சட்டப்பேரவையில் சொன்னதை மீண்டும் சொல்கிறேன்...**

**தமிழ்நாட்டுக்கு ஊறு விளைவிக்கும் எந்தத் திட்டத்தையும் திராவிட முன்னேற்றக் கழகம் ஒருபோதும் அனுமதிக்காது!**

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது பதிவில் குறிப்பிட்டுள்ளார்.